II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 9 of 2024**

Deposition of witness for the Petitioner / PW 1
solemnly by Thiru.K.Palanikumar, Assistant
in accordance with the provision of Act I for 1873 on 17.10.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : Pradeep | Caste | : |
| Father's / Husband's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

முதல் விசாரணை தொடர்ச்சி =

நான் வழக்கின் மனுதாரர். ஏற்கனவே ம.சா.1 ஆக எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். இன்று அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை ம.சா.ஆ.1 முதல் 16 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. முதல் தகவல் அறிக்கையின் நகல் ம.சா.ஆ.1

2. இறப்பு அறிக்கையின் நகல் ம.சா.ஆ.2

3. 1ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நகல் ம.சா.ஆ.3

4. வாரிசு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.4

5. பிரேத பரிசோதனை அறிக்கையின் நகல் ம.சா.ஆ.5

6. 1ம் எதிர்மனுதாரரின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையின் நகல் ம.சா.ஆ.6

7. போலிசாரின் மாதிரி வரைபடத்தின் நகல் ம.சா.ஆ.7.

8. இறுதி அறிக்கையின் நகல் ம.சா.ஆ.8

9. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஆ.சி. புத்தகத்தின் நகல் ம.சா.ஆ.9

10. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமத்தின் நகல் ம.சா.ஆ.10.

11. Offer Letter Xerox Copy ம.சா.ஆ.11.

12. Service Letter Xerox copy ம.சா.ஆ.12.

13. சம்பள பட்டியல்களின் நகல் ( April 2023, May 2023, June 2023, July 2023, August 2023, September 2023, October 2023) ம.சா.ஆ.13

14. எனது ஆதார் அட்டையின் நகல் ம.சா.ஆ.14.

15. எனத பான்கார்டின் நகல் ம.சா.ஆ.15.

16. வங்கி இருப்பு கையேட்டின் நகல் ம.சா.ஆ.16.

1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –

விபத்து 20.01.2023 ல் நடந்தது. விபத்து சமயம் என் மாமனார் இருச்க்கர வாகனத்தை ஓட்டி சென்றார். என் மனைவி அவரது வண்டியில் பின்னால் உட்கார்ந்து சென்றார். விபத்தில் இறந்தவர் எனது மனைவி. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. இந்த விபத்து 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தால் நடக்கவில்லை என்றும், அடையாளம் தெரியாத இருசக்கர வாகனத்தின் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்றும், அந்த வாகனத்தின் மீது தான் நான் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும் சரியல்ல. விபத்து பற்றி எனது மாமனார் தான் எனக்கு தகவல் கொடுத்தார். தகவல் தெரிந்து நான் நேராக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு போனேன். முதலில் கே.சி. மருத்துவமனைக்கு என் மாமனார் என் மனைவியை சேர்த்தார். அதன் பிறகு சிம்ஸ் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அதன்பிறகு தான் கீழ்பாக்கம் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி எனது மனைவி இறந்துவிட்டார். நாங்கள் உடனடியாக கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சேர்த்திருந்தால் என் மனைவி பிழைத்திருப்பார் என்றும் எனவே 2ம் எதிர்மனுதார் இழப்பீடு கொடுக்கவேண்டியதில்லை என்றாலும் சரியல்ல. என் மனைவி தனியார் நிறுவனத்தில் மேலாளராக வேலை பார்த்து வந்தார். என் மனைவி தினமும் அலுவலகம் சென்று வந்தார். நானும் ஒரு தனியார் நிறுவனத்தில் Data Analist ஆக வேலை பார்க்கிறேன். எனக்கு பொருளாதார இழப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.